## நாணய, வங்கித்தொழில் அபிவிருத்திகள்

**பண நிரம்பல்**

*1976இன் இறுதியில், அட்டவணை 15இல் காட்டப்பட்டுள்ளவாறு பணநிரம்பல் 1975இன்இறுதி நிலைமையுடன் ஒப்புநோக்குகையில் ரூ. 10,770 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இது, 1975இன் 4.8 சதவீத, 1974இன் 6.0சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்புநோக்குகையில் 34.9 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. பண நிரம்பல் எண்தொகைகளின் மாதாந்தச் சராசரி (ஆண்டு முழுவதும் பண நிரம்பல் அசைவின்தனிச் சிறப்புகளை உள்ளடக்கும் ஒரு குறிகாட்டியாக அமைகின்றது) 1975ஆம் 1974ஆம் ஆண்டுகளின் முறையே 1.9, 18.1 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்புநோக்குகையில் 1976இல் 22.4சதவீதத்தால் உயர்வுற்றது.*

**அட்டவணை 15**

### பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களும் அடிப்படைக் காரணிகளும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | | |
|---|---|---|
| **அமைப்பு** | | |
| (அ) பொது மக்களிடமிருந்த கேள்வி வைப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் | + 606.7 | |
| (ஆ) பொது மக்களிடமிருந்த நாணயங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் | + 470.7 | |
| பண நிரம்பலின் தேறிய மாற்றங்கள் ... ... | | + 1,077.4 |
| **பகுப்பாய்வு** | | |
| 1. வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) ... ... | | + 470.1 |
| 2. தனியார் துறை ... ... ... ... ... | | — 14.2 |
| (அ) கூட்டுறவு நிறுவனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ... | + 112.8 | |
| (ஆ) ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ... | + 426.7 | |
| (இ) கூட்டுறவு நிறுவனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | — 21.4 | |
| (ஈ) ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | — 486.6 | |
| (உ) வர்த்தக வங்கிகளின் (தேறிய) ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் ... | — 45.7 | |
| 3. அரசு சார்துறை ... ... ... ... ... | | + 84.1 |
| (அ) அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ... | + 42.6 | |
| (ஆ) அரச கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | + 41.5 | |
| 4. அரச துறை ... ... ... ... ... ... | | + 540.5 |
| (அ) வர்த்தக வங்கிகள் வசமுள்ள திறைசேரி உண்டியல்கள், அரச, அரச உத்தரவாதப் பிணைகள், அரச இறக்குமதி உண்டியல்கள் ஆகிய உடைமைகள் ... | + 315.4 | |
| (ஆ) அரசின் கணக்கால் கொள்வனவு செய்யப்பட்ட பண விடயங்கள் ... | + 51.4 | |
| (இ) மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள், அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடைமைகள் ... ... | + 351.7 | |
| (ஈ) மத்திய வங்கி முற்பணங்கள் ... ... | + 11.5 | |
| (உ) மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (தேறிய) ... | + 83.2 | |
| (ஊ) வங்கித் துறையிடமுள்ள அரச வைப்புக்களும், திறைசேரியிலும், கச்சேரியிலும் உள்ள பண நிலுவைகளும் ... | — 272.6 | |
| 5. இடைப்போக்கிலுள்ள விடயங்களின் சீராக்கங்கள் ன ... | | — 3.1 |
| தேறிய மாற்றம் ... ... ... ... | | + 1,077.4 |

குறிப்பு:- அடையாளங்கள் பண நிரம்பலில் ஏற்பட்ட விளைவைக் குறிக்கின்றன.

*1976இல் பண நிரம்பலில் வழமையாக ஏற்படும் பருவகால ஏற்றத் தாழ்வு ஏற்படவில்லை, யூலை மாதம் நீங்கலாக, பண நிரம்பல் தொடர்ச்சியான*

ஒரு மேல்நோக்கிய போக்கைக் காட்டியது. இவ்வாண்டில், பண நிரம்பலில் ஏற்பட்ட பருவகால மாற்றங்களை, அரசின்பணக்குறை நிதியிடலினதும், அதிகரித்த வெளிநாட்டு சொத்துக்களினதும் தாக்கங்கள் பெருமளவிற்கு மறைக்கக்கூடியதாக அமைந்தன. பருவகால மாற்றங்களை உருவாக்கும் சில காரணிகள் இக்காலப்பகுதியில் எழவேயில்லை. எடுத்துக்காட்டாக பொதுவாகப் பருவகாலத் தன்மையில் அமைந்திருந்த உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் விளங்கிய முற்பணங்களின் மட்டம் 1976 யூலையில் ரூ. 3710 இலட்சமாக உயர்வுற்று மீதி ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக உயர்வுற்ற நிலையிலேயே இருந்தது.

1976ஆம் ஆண்டின் மாதாந்தப் பண நிரம்பல் எண்தொகைகளை சென்ற ஆண்டின் தொடர்பான மாத எண்தொகைகளுடன் ஒப்புநோக்குகையில் ஏறக்குறைய ஆண்டு முழுவதும் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்புடன் சனவரியில் 6.4 சதவீதத்திலிருந்து திசெம்பரில் 34.9 சதவீதமாக வேறுபடும் அதிகரிப்பு வீதத்தைக் காட்டுகின்றது. 1975ம் ஆண்டில் ஏற்பட்ட இத்தகைய மிகப் பெரும் அதிகரிப்பு 6.1 சதவீதமாகும்.

இவ்வாண்டின்போது பண நிரம்பலின் அதிகரிப்பிற்குக் காரணமாக விளங்கிய முக்கிய காரணிகள் அரசின் நிதித் தொழிற்பாடுகளும், தேறிய வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்புமேயாகும். இவ்வாண்டின்போது வங்கித் துறையிலுள்ள அரசின் நிதித் தொழிற்பாடுகள் பண நிரம்பலின் மீது ரூ. 5400 இலட்சம்கொண்ட விரிவுத் தாக்கத்தை விளைவித்தது. வருமானத்தில் ஏற்பட்ட மந்த அதிகரிப்பினால் நலன்புரி உதவுதொகை உட்பட உயர்ந்த அளவிலுள்ள மூலதன, மீண்டெழுஞ் செலவுகளைத் தாங்கும் முயற்சியுடன் அரசு நிதி பெறுவதற்காக வங்கித் தொழில் முறையை அதிகளவில் நாடவேண்டியிருந்தது. அரசின் சார்பில் வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட பெருமளவு விரிவு, வங்கித்துறை வைப்புக்களின் அதிகரிப்பினால் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. முழுவதுமாக நோக்கின் இவ்வாண்டின்போது அரசிற்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 3660 இலட்சத்தால் அதிகரித்தது. வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல்கள் அரச, அரச உத்தரவாதப் பிணைகள், அரச இறக்குமதி உண்டியல் ஆகியவற்றின் உடைமைகள் ரூ, 3150 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், அரசின் கணக்கில் வர்த்தக வங்கிகளினால் கொள்வனவு செய்யப்படும் பண விடயங்கள் ரூ. 510 இலட்சத்தால் அதிகரித்தன. மத்திய வங்கியிலிருந்து அரசு பெற்ற கடன்பாடுகள், மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்கள், அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ஆகியவற்றின் உடைமைகளில் ஏற்பட்ட ரூ. 3,520 இலட்சம்கொண்ட அதிகரிப்பு, அரசிற்கான வங்கியின் தற்காலிக முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 110 இலட்சம் கொண்ட அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக ரூ. 3630 இலட்சத்தால் அதிகரித்தன. மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களினதும், கணக்குகளினதும் (தேறிய) அசைவுகள் ரூ. 830 இலட்சம் கொண்டளவிற்கு விரிவுத் தன்மையதாக அமைந்தன. வங்கித் துறையிலுள்ள அரசின் வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 2730 இலட்சம்கொண்ட அதிகரிப்பு அரசின் நிதித் தொழிற்பாடுகளினால் ஏற்பட்ட நாணய விரிவை எதிரீடுசெய்யும் காரணியாக அமைந்தது. இந்நிலை 1975இல் வங்கித் தொழில்முறையுடன் உள்ள அரசின் வைப்புக்களினதும், திறைசேரியிலுள்ள பண நிலுவைகளினதும் அசைவுகள், பண நிரம்பலின் மீது ரூ, 1200 இலட்சம்கொண்ட விரிவுத் தாக்கத்தை விளைவித்தமைக்கு முழு மாறாக அமைந்துள்ளது.

1976ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட விளைவுகள் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபட்டுக் காணப்பட்டமையாலேயே அரசு வங்கித்தொழில் அமைப்பை நாடவேண்டிய தேவை ஏற்பட்டது. மூலமதிப்பீடுகளின்படி, 1976ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் ரூ. 22,960 இலட்சம்கொண்ட பணக்குறை முழுவதும் விரிவுத்தன்மையல்லா மூலங்களிலிருந்துபெற்ற நிதியினுல் நிரப்பப்படவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இவ்வாண்டு சென்றுகொண்டிருக்கையில் உண்மையான வரவுகளும் செலவுகளும்மூல மதிப்பீடுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகளைக் காட்டின. 1976ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட விளைவு, மொத்தச் செலவு ரூ. 13,730 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், இதற்கு ஈடு செய்யத்தக்கதாக வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 940 இலட்சமாக மட்டுமே அமைந்தது. இதன்படி இவ்வாண்டிற்குரிய வரவுசெலவுத்திட்டக்குறை ரூ, 35,760 இலட்சத்திற்கு உயர்வுற்றது. இக்குறையை நிதியிடும் ஆற்றலை உள்நாட்டு விரிவுத்தன்மையற்ற மூலங்கள் பெற்றிராததால் விரிவுத்தாக்க நிதியிடலை நாடவேண்டிய கட்டாய நிலையேற்பட்டது.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் நாணய விரிவிற்கு வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சியே இரண்டாவது மிக முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக அமைந்தது. 1974ஆம், 1975ஆம் ஆண்டுகளில் முறையே ஏற்பட்ட ரூ. 1,790 இலட்சம் ரூ. 2,140 இலட்சம் கொண்டகணிசமானளவு வீழ்ச்சிக்குப் பின் 1976 இல் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) ரூ. 4,700 இலட்சத்தால் உயர்வுற்றன இச்சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு பெருமளவிற்கு மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் காட்டப்பட்டுள்ளது. இவை ரூ. 3,050 இலட்சத்தால் அதிகரித்து முக்கியமாக வங்கியின் வெளிநாட்டுத் திரவ சொத்து நிலுவைகள் வடிவில் அமைந்தன. மேலும் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி உடைமைகள் சென்ற ஆண்டின் ரூ. 70 இலட்சம் வீழ்ச்சிக்கு மாருக ரூ. 1,650 இலட்சம்கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தன. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்களின் உயர்விற்கு வெளிநாட்டிலுள்ள பணத்தினதும் நிலுவைகளினதும் வெளிநாட்டு அரச பிணைகளிலும், சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புகளே காரணமாகும். இவ்வதிகரிப்பு பன்னுட்டு அமைப்புக்களிலும், வெளிநாட்டுக் கடன்பாடுகளிலும் உள்ள வைப்புக்களினுல் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. முழுவதுமாக நோக்கின், வெளிநாட்டிலுள்ள பணமும் நிலுவைகளும் ரூ. 3,310 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில் வெளிநாட்டு அரசப் பிணைகளும் சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகளும் முறையே ரூ. 260 இலட்சத்தாலும், ரூ 280 இலட்சத்தாலும் உயர்வுற்றன. ஆயினும், பெருமளவிற்குப் பன்னுட்டு நாணய நிதியத்திலிருந்துபெற்ற அதிகரித்த கொள்வனவுகளினுலும், வெளிநாட்டுக் கடன்பாடுகளினுலும் பன்னுட்டு அமைப்புகளின் வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 730 இலட்சம்கொண்ட அதிகரிப்பினுல் இவ்வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளின் விரிவுத்தாக்கம் ரூ. 3,050 இலட்சமாக விளங்கியது

வர்த்தக வங்கிகளில் தேறிய வெளிநாட்டுச் செலாவணி உடைமைகளின் வளர்ச்சி மொத்த வெளிநாட்டுச் செலாவணி உடைமைகளில் ரூ. 1760 இலட்சம் கொண்ட அதிகரிப்பின் விளைவாகும். இவ்வதிகரிப்பு வெளிநாட்டுச் செலாவணிப் பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூ. 120 இலட்சம்கொண்ட உயர்வினுல்

சிறிதளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. மொத்த வெளிநாட்டுச் செலாவணி உடைமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய உடைமைகளில் ஏற்பட்ட ரூ. 30 இலட்சம், வெளிநாட்டு வங்கிகளிலுள்ள பணத்தின் ரூ. 120 இலட்சம், ஏற்றுமதி உண்டியல்களில் ஏற்பட்ட ரூ. 1630 இலட்சம்கொண்ட அதிகரிப்புக்களே காரணமாகும். இவ்வதிகரிப்பு வெளிநாட்டு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மேலதிகப்பற்றுக்களின் . 10 இலட்சம்கொண்ட வீழ்ச்சியினல் சிறிதளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. சென்ற ஆண்டின் செயலாற்றத்தைத் தொடர்ந்து மொத்த வெளிநாட்டுச் செலாவணிப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, ஏறக்குறைய முழுவதும் வெளிநாட்டிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன்பாடுகளின் அதிகரிப்பே காரணமாகும்.

1975இல் அரச கூட்டுத்தாபனங்களேயும், கூட்டுறவு நிறுவனங்களேயும் உள்ளடக்குவதாக வரைவிலக்கணம் கூறப்பட்ட தனியார் துறை சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் பண நிரம்பலின் மீது விரிவுத்தாக்கங்களே உருவாக்குவதில் மிகச் சாதாரண பங்கை வகுத்துள்ளது. 1976இல் இத்துறையின் தொழிற்பாடுகள் மேலும் குறைந்தளவு விரிவுத் தன்மையனவாக விளங்கின. பண நிரம்பலின் தனியார் துறைத் தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத் தாக்கம் 1974இலும் 1975இலும் முறையே ரூ. 5330 இலட்சமாகவும் ரூ. 1310 இலட்சமாகவும் விளங்குகையில் 1976இல் இத்துறைத் தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத் தாக்கம் ரூ. 700 இலட்சம் மட்டுமாகவே அமைந்தது.

**வட்டிவீதங்கள்**

1976ஆம் ஆண்டுக்காலப்பகுதியின் வட்டி வீதங்களிலேற்பட்ட மாற்றங்கள் முந்தியஆண்டைவிடக் குறைவுற்றிருந்தபோதும் நிகழ்ந்த மாற்றங்கள் உயர்வான வழங்கல் வீதங்களுக்கு வழிவகுத்தன. 1975 ஏப்பிறலில் கொண்டுவரப்பட்ட வழிமுறைகளின் வாயிலாக முன்னைய ஆண்டிலேயே வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்களில் முக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் நடைமுறையிலுள்ள வீதங்களிலே திரட்டப்படும் வைப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் திருப்திகரமாயிருந்தமையால் 1976ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வர்த்தக வங்கிகள் தமது வைப்பு வீதங்களே மேல்நோக்கித்திருத்த வேண்டிய கட்டாயமான காரணங்களெதுவுமிருக்கவில்லை இவ்வாண்டு காலத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் வைப்பு வீதங்கள் திறைசேரி உண்டியல் வீதம், வங்கிவீதம் ஆகியன மாற்றமின்றியிருந்தன. (எனினும் பின்னர் கூறப்பட்ட வீதம் 977 சனவரி 26இலிருந்து 2 சதவீதப் புள்ளிகளிலிருந்து 8½ சதவீதமாக மேல்நோக்கித் திருத்தப்பட்டது,)

இவ்வாண்டுக் காலப்பகுதியில் வங்கியிடையிலான அழைப்புக் கடன்கள்மீதான ஆகக்கூடிய, ஆகக்குறைந்த வீதங்கள் முறையே 8 சதவீதமாயும் 5 சதவீதமாயும் மாற்றமின்றியிருந்தன. எனினும் ஆண்டினிறுதியில் இச்சந்தையில் சராசரி வீதத்தை ஆகக்கூடிய நிலேக்குத் தள்ளும் வகையில் அமுக்கம் காணப்பட்டது. இது, வர்த்தக வங்கிகளினல் 1976 ஒற்ருேபர் 29இலிருந்து இலங்கைத்தாள்களையும், குத்திகளையும் வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட தேவையான ஒதுக்குகளின் அளவில் ஏற்பட்ட படிப்படியான குறைப்பின் தொடர்பு விளேவாகும். வர்த்தக உண்டியல்கள் மீதான வர்த்தக வங்கிகளின் கழிவுவீதம்

ஆண்டுத் தொடக்கத்தில் மேல்நோக்கி உயர்ந்தது. ஆகக் கூடிய வீதம் 12 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகும். வர்த்தக வங்கிகளின் வழங்கல் வீதங் கள்பற்றிய செய்திகள், குறிப்பிட்ட கடன்வழங்குவோரினல் வழங்கப்பட்ட கடன் களினதும் மேலதிக பற்றுகளினதும் ஆகக்கூடிய வீதங்கள் 1976 சனவரி யில் மேல்நோக்கிச் சென்றன. அவ்வாறு வங்கி வைப்பாளர்கள் அரச பிணைகளால் பெறப்பட்ட கடன்கள் முற்பணங்கள் ஆகியவற்றின் ஆகக்கூடிய வீதம் 11 சதவீதத்தினின்று 14 சதவீதத்திற்கு உயர்கின்றது. கூட்டுப்பங்குத் தொகுதி கூட்டு நிலையங்களின் பங்குகள் 12 சதவீதத்திலிருந்து 13 சதவீத மாயும், வர்த்தக இருப்பு 13 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாயும் அசையாச் சொத்து 12 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாயும் ஏனையவை 13 சதவீதத்தி லிருந்து 14 சதவீதமாயும் அதிகரித்தன. இவ்வாறு 14 சதவீதங்கொண்ட ஆகக்கூடிய வீதம் 1975இல் பெறப்படாத முற்பணங்களுக்கு மட்டுமே பயன் படுத்தப்பட்டவிடத்தில் பெறப்பட்ட முற்பணங்களில் அதிகமானவற்றின் ஆகக்கூடிய வீதம் 1976இல் 14 சதவீதம் வரை உயர்ந்தது.

**வர்த்தக வங்கித் தொழில்**

1976ஆம் ஆண்டு வர்த்தக வங்கிகளின் மூலவளங்களைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க அளவு விரிவாக்கத்தினை எதிர்கொண்டது. முன்னைய ஆண்டின் அனுபவத்துக்கு மாறாக வைப்புக்களின் வளர்ச்சி கணிசமான அளவு அதி கரிப்பை மூலவளங்களில் ஏற்படுத்தியது. இந்த ஆண்டுக்காலப்பகுதியில் கேள்வி வைப்புக்கள் ரூ. 8690 இலட்சத்தினல் அதிகரித்தவிடத்து தவணை சேமிப்பு வைப்புக்கள் ரூ. 4630 இலட்சங்களால் உயர்வடைந்தன. அதிகரித்த வைப் புக்கள் மூலம் வழங்கப்பட்ட மூலவளங்கள், வெளிநாட்டுக் கடன்பாடுகள் செலுத்தப்பட்ட மூலதனங்கள், ஒதுக்கு நிதிகள் பங்கிடப்படாத இலாபங்கள், மற்றும் ஏனைய பொறுப்புக்கள் என்பவற்றின் அதிகரிப்புக்களினல் ஓரளவு அதிகரித்தது. மத்திய வங்கியினல் வழங்கப்பட்ட அளவின் மட்டத்தில் காணப் பட்ட குறைப்பு இந்த ஆண்டுக் காலத்தில் வர்த்தக வங்கிகட்குக் கிடைக் கத்தக்க மூலவளங்களைக் குறைத்த காரணியாக விளங்கியது. முன்னைய ஆண்டில் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து மொத்த வைப்புக்களின் திரவச் சொத்துக்களின் மாதாந்த சராசரி விகிதம் இந்த ஆண்டுக் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது முன்னையது 32.6 சதவீதத்திலிருந்து 29.6 சதவீதமாகவும் பின்னையது 13.8 சதவீதத்திலிருந்து 11.3 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. இம்மாற்றங்களைக்கொண்டு வாத்தக வங்கிகளின் கடன் வழங்கும் இயலளவை அதிகமாகப் பயன்படுத்துவதாக கருத்திற்கொள்ளக்கூடாது. உண்மையில் மொத்த வைப்புக்களில் கடன்களினதும் முற்பணங்களினதும் சராசரிவிகிதம் 1975இன் 97.5 சதவீதத்திலிருந்து 1976ல் 91.0 சதவீதத்துக்கு வீழ்ச்சி யுற்றது.

தனியார் துறைக்கு வழங்கிய வர்த்தக வங்கிக் கொடுகடன் (அரச கூட்டுத் தாபனங்களையும் கூட்டுறவு நிறுவனங்களையும் உள்ளடக்கும்) 1976ல் ரூ. 7300 இலட்சத்தால் அல்லது 19.6 சதவீதத்தால் உயர்வுற்றது. இது 1975ல் நிலவிய நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அவ்வாண்டில் இத்துறைக்கு வழங்கப் பட்ட கொடுகடன் 1,810 இலட்சத்தினல் அல்லது 5 1 சதவீதத்தினல் மட்டுமே அதிகரித்தது. 1976இல் வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பானது ரூ. 5,390இலட்சத்தால் அதிகரித்த கடன்களில் பெரிதும் எடுத்துக்காட்டப் பட்டது ஒப்புநோக்குகையில் ஏற்றுமதி உண்டியல்கள் ரூ. 1,630 இலட்சத் தினலும் மேலதிகப் பற்றுக்கள் ரூ. 720 இலட்சத்தாலும் சேகரிக்கும்

நிலையில் இருந்த காசு விடயங்கள் ரூ. 670 இலட்சத்தாலும் அதிகரித்தன. மறுபுறம் இவ்வாண்டில் வர்த்தக வங்கிகள் வைத்திருந்த இறக்குமதி உண்டியல்கள் ரூ. 1110 இலட்சத்தால் வீழ்ந்தன. தனியார்துறைக்குள் அடங்கிய எல்லாத் துணைத்துறைகட்கும் வங்கி வழங்கிய கொடுகடன் அதிகரித்திருந்தது. ஆனால் ஆகக் கூடிய தொகையாகிய ரூ.5750 இலட்சம் ஏனைய தனியார்துறைவாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. கூட்டுறவு நிறுவனங்கட்கு வங்கி வழங்கிய கொடுகடன் ரூ. 1130 இலட்சத்தால் அதிகரித்தவேளையில் அரச கூட்டுத்தாபனங்கட்கு வழங்கிய கொடுகடன் ரூ. 430 இலட்சத்தால் அதிகரித்தது. வங்கித் துறை தொழிற்பாடுகளில் ஏனைய தனியார்துறை தமது தவணைச் சேமிப்பு வைப்புக்களை கணிசமான அளவு கட்டியெழுப்பியதன் பின்னணியிலேயே அவற்றிற்கு வங்கி வழங்கியிருந்த கொடுகடன் பெருமளவில் அதிகரித்ததென்பது உணரற்பாலது எல்லாமாக இவ்வைப்புக்கள் ரூ. 4870 இலட்சத்தினால் அதிகரித்தன. இதன் கருத்து யாதெனில் கொடுகடனின் தேறிய அதிகரிப்பு ரூ. 880 இலட்சமாகும். சென்ற ஆண்டுபோல் 1976இல், வங்கிக் கொடுகடனின் அதிகரிப்புக்கு இலங்கை வங்கிகளே ஏறக்குறைய முழுக் காரணமாக விளங்கின. மொத்த அதிகரிப்பில் இலங்கை வங்கிகள் ரூ. 7240 இலட்சத்துக்கு அல்லது 99.2 சதவீதத்துக்கு வகைகூறின.

**வர்த்தக வங்கிகளின் கிளைவிரிவாக்கம்**

அண்மை ஆண்டுகளில் மிக விரைவாக விரிவாக்கம் பெற்று வந்த வர்த்தக வங்கிகளின் கிளைகளின் விரிவாக்கத்தினை 1976இலும் தொடர்ந்தும் கவனிக்கத் தக்கதாயிருந்ததுடன், இவ்வாண்டில் மொத்தமாக 77 கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டன. இலங்கை வங்கிகளிலேயே இவ்வதிகரிப்பு முழுமையாக ஏற்பட்டது. வெளிநாட்டு வங்கிகளால் தொழிற்படுத்தப்பட்ட அலுவலகங்களின் எண்ணிக்கையில் மாற்றம் இருக்கவில்லை. இவ்வாண்டில் திறக்கப்பட்ட மொத்த வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 1975(105), 1974ம்(154) ஆண்டுகளைவிடக் குறைவாக இருந்தபோதும்இது நாட்டின் வர்த்தக வங்கி அலுவலகங்களின் விரிவாக்க வீதத்தில் தளர்ச்சியைக் குறிக்கவில்லை. இவ்வாண்டில் திறக்கப்பட்ட 77 கிளை அலுவலகங்களில் 42 மட்டும் இலங்கை வங்கியினால் திறக்கப்பட்ட வேளாண்மைப் பணிக்கிளைகளாக விளங்கின. இதன் கருத்து யாதெனில் புதிய கிளை அலுவலகங்களில் 35முழுக்கிளை அலுவலகங்களாகும். மாறாக முன்னைய ஆண்டின்போது திறக்கப்பட்ட 105 புதிய கிளைகளில் 8 கிளைகள் மட்டுமே முழுக் கிளைகளாக விளங்கின. 1976 ஆம்ஆண்டு முடிவில் வேளாண்மைப் பணிநிலையங்களது கிளைகளின் மொத்தஎண்ணிக்கை 341 ஆகும். வேளாண்மைப்பணி நிலையக் கிளைகளுடன் இலங்கை வங்கி புதிதாக 2 புதிய முழுக்கிளைகளைத் திறந்ததுடன் 3 கச்சேரிக்கிளைகளை, முழுக் கிளைகளாக மாற்றியதன் வாயிலாக 1976முடிவில் திறக்கப்பட்ட முழுக்கிளைகளின் எண்ணிக்கை 70ஆல் உயர்ந்தது.

1976இல் வர்த்தக வங்கிக்கிளை விரிவாக்கத்தில் மிகவும் கவனிக்கத்தக்க பண்பு யாதெனில் மக்கள் வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்ட மிகவிரைந்த கிளை விரிவாக்கத் திட்டமாகும். இவ்வாண்டில் மக்கள் வங்கி திறந்த 29 புதிய கிளைகளுடன் ஆண்டுமுடிவில் இதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 187 இற்குக் கொண்டுவரப்பட்டது. ஒப்பீட்டில் இவ் வங்கியால் முன்னைய ஆண்டில் திறக்கப்பட்ட கிளை அலுவலகங்களின் எண்ணிக்கை 5 மட்டுமேயாகும். இவ்வாண்டில் திறக்கப்பட்ட மக்கள் வங்கிக்கிளைகள் நாடுமுழுவதிலும்

பரந்து விளங்கின. இவ்வாண்டில் அட்டன் நெசனல் வங்கியும் புதிய கிளை ஒன்றைத் திறந்ததைத் தொடர்ந்து அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1976இன் இறுதியில் 23ஆக அதிகரித்தது.

**கிராமியக் கொடுகடன்**

1976இல் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தினூலும் கிராமிய வங்கிகள் திட்டத்தினூலும் இலங்கை வங்கி துணை அலுவலகங்களாலும் வழங்கப்பட்ட கொடுகடனையும் உள்ளடக்கிய மொத்தக் கொடுகடன் வழங்கல்கள் ரூ. 1619 இலட்சமாக விளங்கின. முன்னைய ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட இதன்தொடர்பான தொகையைவிட இது, 25.6 சதவீதம் அதிகமானதாகும். அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் மொத்தமாக வழங்கப்பட்ட கடனில் 49.4 சதவீதம் கிராமிய வங்கிகளினூலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூலும் வழங்கப்பட்டன.

நோக்க அடிப்படையில் இம் மூன்று திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட மொத்தக்கடன் வழங்கலில் ரூ. 1308 இலட்சம் அல்லது 80.8 சதவீதம் முன்னையஆண்டைக்காட்டிலும் ரூ. 248 இலட்சம் கொண்ட தொகையால் அதிகரித்துநெற்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மொத்தப் பயிர் வேளாண்மைக்கு வழங்கப்பட்ட கடன்களில் 72.3 சதவீதத்திற்கு அல்லது அனைத்து நோக்கங்களுக்காகவும் மூன்று திட்டங்களின்கிழும் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடனில் 58.4 சதவீதத்திற்கு வகைகூறின. முன்னைய ஆண்டைப்போலவே நெல் வேளாண்மைக்காக வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் பெரும்பகுதி அல்லது ரூ. 691 இலட்சம் அனைத்தும் அடங்கிய கிராமியக்கொடுகடன் திட்டத்தின்கிழ் கிராமிய வங்கி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மக்கள் வங்கியால் பகிர்ந்தளிக்கப்பட்டது. துணை உணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ 322 இலட்சம் அல்லது பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட மொத்தக்கடன்களில் 24.6 சதவீதமாக அல்லது எல்லா நோக்கங்களுக்காகவும் இம்மூன்று திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் 19.9 சதவீதமாக இருந்தது. கிராமிய வங்கிகளாலும் வேளாண்மைப்பணி நிலையங்களிலிருந்த இலங்கை வங்கித் துணை அலுவலகங்களாலும் வீடமைத்தல், மின்னிணைப்பு, கிணறுதோண்டல் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களின் தொகை ரூ. 137 இலட்சங்களாகும்.

1967இல் புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம் தொடங்கியதையடுத்தும், பின்பு அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழும் 1975/76 பெரும் போகம் வரை மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட நெற் கடன்களின் மொத்தத் தொகை ரூ 4989 இலட்சமாக விளங்கியது. 1976 முடிவில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க இத்தொகையில் நெற்செய்கைக்காக வழங்கப்பட்ட கடனில் செலுத்தத்தவறிய தொகை ரூ. 2041 இலட்சம் அல்லது 40.9 சதவீதமாகும். 1976ம் ஆண்டு முடிவில் வேளாண்மைக் கடன் திட்டத்தின்கீழ் அனைத்துப் பயிர்களுக்கென வழங்கிய மொத்தக் கடன் ரூ. 6532 இலட்சங்களாகும்.

வேளாண்மைக் கடன்களில் செலுத்தத் தவறிய கடன்களின் உயர்வீதமே தொடர்ந்தும் பயிர்ச் செய்கைக் கடன்களின் பெரும் பிரச்சினையாக விளங்குகிறது. அண்மைய ஆண்டுகளில் நிலவிய சீரற்ற வானிலைக் காரணிகள் வேளாண்மையாளர்களின் மீளக் கொடுப்பனவுகளின் தன்மையினைக் குறைத்ததாயினும் இதுமட்டுமே கடன்களைத் திருப்பிக் கொடுப்பதில் குறைந்த விகிதம் நிலவியதற்கு முழுக்காரணமாக இருக்க முடியாது.

கடன்களைக் கூடிய விகிதத்தில் திருப்பிப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு நிருவாகத் திட்டத்திலுள்ள நிறுவனக் காரணிகள் மீண்டும் ஆராயப்பட்டு திருத்தப்பட வேண்டியதொன்றாகும்,

**நாணயக் கொள்கை**

மிகப்பெரிய நாணய விரிவாக்கப் பின்னணியில் வர்த்தக வங்கிகளுக்குக் கொடுகடன் வழங்குவதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இவ்வாண்டில் சில நாணயக்கொள்கை வழிமுறைகள் கொண்டுவரப்பட்டன. இதை நடைமுறைப் படுத்தும் நோக்குடன் 1976 ஒற்றோபர் 29ல்வர்த்தக வங்கிகள் கைப்பண மாக வைத்திருக்கத்தக்க ஒதுக்குத் தேவைகளின் அளவு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. இரண்டாவதாக 1976 ஒற்றோபர் 4 தொடங்கி இன்றி யமையாதன அல்லாத தேவைகளுக்கு வங்கி வழங்கும் கொடுகடனில் உச்ச வரம்பு விதிக்கப்பட்டது. வங்கிவீதத்தை மேலெழும்நிலையில் திருத்தவேண்டு மெனவும் ஆராயப்பட்டபோதும் 1977 சனவரி 26 வரை, இந்நடவடிக்கை பின்போடப்பட்டு அன்றிலிருந்து $8\frac{1}{2}$ சதவீதத்திற்கு 2 சதவீதப் புள்ளிகளால் வட்டிவீதம் உயர்த்தப்பட்டது.

தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வங்கிக்கொடுகடன் வழமைக்கு மாறாக விரிவடையும்முறையில் 1976இன் நாணய விரிவாக்கம் அமையாததினால் கடு மையான நாணய வழிமுறை முடிவுகள் எடுக்கப்படவில்லை. இச்சூழ்நிலையில் இன்றியமையாதன அல்லாத தேவைகளுக்கு வங்கிக் கொடுகடன் அதிகரிப் பதை கட்டுப்படுத்தும் தெரிந்தெடுக்கப்பட்ட நாணயக் கொள்கையைக்கடைப் பிடிப்பதே பெருமளவு பொருத்தமுடையதாக அமையும். அரசின் இறைக்கொள் கைத் தொழிற்பாடுகளும் வெளிநாட்டு வங்கிச் சொத்துக்களின் வளர்ச்சியுமே 1976இன் நாணய விரிவாக்கத்திற்கு முக்கிய காரணங்களாக விளங்கின. இச் சூழ்நிலையில் நாணய விரிவாக்கத்தைக்கட்டுப்படுத்த கடைப்பிடிக்கப்படும் நாண யக்கொள்கை ஓரளவிற்குத்தான் பயனுடையதாக இருக்கும். 1976இல் அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்க,ள் ஆகியவற்றை உள்ளடக்கும் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வங்கிக் கொடுகடன் (தேறிய) ரூ. 700 இலட்சத்தால் மட்டுமே அதிகரித்தது. தனியார் துறையின் சார்பில் வழங் கப்பட்ட வங்கிக் கொடுகடன் எல்லைமீறி விரிவடையும்போது அதற்கேற்ப நாணய விரிவாக்கம் ஏற்படாத சூழ்நிலையில் கடுமையான நாணயக் கொள்கை யானது விலை அதிகரிப்புக்களைத் தடுப்பதில் நல்ல பயனைக் கொடுப்பதாக அமையாது. 1976இல் மிகப்பெரிய நாணய விரிவாக்கம் நிலவிய நிலையில் இச் சாதாரண நாணயக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டமைக்கு இச்சூழ்நிலையே காரணம் என்பது உணரற்பாலது.